# இலங்கையில் போர்த்துக்கேயரது மேலாதிக்கமும் சுதேசிகளது எதிர்நடவடிக்கைகளும்- யாழ்ப்பாண இராச்சியத்தை சிறப்பாகக்கொண்ட ஓர் ஆய்வு

**க. ஜெயதீஸ்வரன்**
வரலாற்றுத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்
jeyathe@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி பதித்த சமயம் இங்கிருந்த கோட்டை, கண்டி மற்றும் யாழ்ப்பாண அரசுகளது ஆட்சியாளர்களும், மக்களும் தமது அரசுகளையும், பண்பாட்டு மரபுகளையும் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டுவந்தமை வரலாற்று உண்மையாகும். எனினும் போர்த்துக்கேயரது சலுகைகளுக்கும், உதவிகளுக்கும் அடிபணிந்த ஒரு சில சுயநலவாதிகளான ஆட்சியாளரதும் மக்களதும் நடவடிக்கைகளால் இவர்களது எதிர்நடவடிக்கைகள் வலுவிழந்து போயின. இவ்வாறான நிலை யாழ்ப்பாண அரசிலும் காணப்பட்டது. யாழ்ப்பாண இராச்சியத்தைப் பொறுத்தவரை போர்த்துக்கேயரது தொடர்பு ஏற்பட்ட காலப்பகுதியில் அதன் ஆட்சியாளனாக இருந்த சங்கிலி மன்னன் முதல் இறுதி ஆட்சியாளனான சங்கிலிகுமாரன் வரை தமது அரசையும், பண்பாடுகளையும் பாதுகாக்கும் வகையில் மக்களது ஆதரவுடன் அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். எனினும் சில ஆட்சியாளரும் மக்களும் போர்த்துக்கேயரது விசுவாசிகளாக செயற்பட்டதனால் அவர்களது எதிர்ப்பு நடவடிக்கைகள் பயனற்றவையாய் முடிவடைந்தன. எனினும் யாழ்ப்பாண இராச்சியத்தவர்கள் தமது தனித்துவப் பண்பாட்டை பாதுகாக்க போர்த்துக்கேயர் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவு இன்றும் யாழ்ப்பாணப் பண்பாடு நீடித்து நிலைக்கவும் தனித்துவமானது என அனைவராலும் பார்க்கப்படவும் காரணமானது எனலாம்.

***பிரதான சொற்பதங்கள்:-*** *அரசு, இராச்சியம், பண்பாடு*

## ஆய்வுக்கோர் அறிமுகம்

இலங்கையின் வரலாற்று வளர்ச்சியில் இடைக்காலமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. இதற்குக் காரணம் பண்டைக்காலம் முதல் தென்பகுதியின் சிங்கள அரசுகளது எழுச்சி மற்றும் அவற்றின் மேலாண்மை பற்றிக் கூறிவந்த இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் வடபகுதியில் நாகதீப பண்பாட்டு அடித்தளத்திலிருந்து முகிழ்த்திருந்த தமிழ் அரசுபற்றி ஆதாரபூர்வமாக தெரிவிக்கின்ற அதேவேளை தென்இலங்கை அரசுகளான கோட்டை, கண்டி ஆகியவை தொடர்பாகவும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இவ் அரசுகள் நிலவியிருந்த காலத்தில் கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையில் காலடி பதித்த போர்த்துக்கேயர் இங்கிருந்த அரசுகளிடையே காணப்பட்ட அரசியல் குழப்பநிலைகளை தமக்கு சாதகமாக பயன்படுத்தி கோட்டை அரசை கி.பி 1597 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாண அரசை கி.பி 1619 ஆம் ஆண்டிலும் தம்வசமாக்கிக் கொண்டனர்[Peries.P.E,1970,P.02]. கண்டி அரசை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட அவர்களுக்கு அது முடியாத காரியமாகவே இறுதிவரை இருந்தது. மதம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் காலடி பதித்த இவர்களது நடவடிக்கைகள் இப்பகுதிகளில் புதியதொரு பண்பாட்டின் ஊடுருவலை ஏற்படுத்துவதாகவே அமைந்திருந்தது. குறிப்பாக வடபகுதியில் யாழ்ப்பாண அரசை பொறுத்தவரை பெரும்பாலான மக்கள் தமிழ் மொழி பேசுவோராகவும், இந்துப் பண்பாட்டில் மூழ்கியோராகவும் காணப்பட்டனர். அதேவேளை தென்பகுதி அரசுகளை பொறுத்தவரை பெரும்பாலானவர்கள் சிங்கள மொழிபேசுவோராகவும் பௌத்தப்

பண்பாட்டில் மூழ்கியோராகவும் காணப்பட்டனர். எனவே இருபகுதியிலும் வாழ்ந்துவந்த பெரும்பாலான ஆட்சியாளர் முதல் சுதேசிகள் வரை தமது தனித்துவப் பண்பாட்டை பாதுகாக்கும் வகையில் போர்த்துக்கேயரது ஆதிக்கம் ஏற்பட்டது முதல் முடிவுறும் வரை அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தனர். குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்தில் சங்கிலி மன்னன் செகராசசேகரன் காலம் முதல் சங்கிலி குமாரன் காலம்வரை ஆட்சிபுரிந்த மன்னர்கள் தமது தனித்துவப் பண்பாட்டை பாதுகாக்கும் வகையில் போர்த்துக்கேயருக்கு எதிராக சுதேசிகளது ஆதரவுடன் போராடி வந்தனர். எனினும் சில ஆட்சியாளரும் சுதேசிகளும் அவர்களது சலுகைகளுக்கு மயங்கி அவர்களது விசுவாசிகளாக வாழ்ந்து வந்ததுடன் ஆட்சியாளரதும் சுதேசிகளதும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகள் தோல்வியடையவும் காரணமாய் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுப் பிரச்சனை**

யாழ்ப்பாண இராச்சியத்தில் இடம்பெற்ற போர்த்துக்கேயருக்கு எதிரான சுதேசிகளது செயற்பாடுகளை முதன்மைப்படுத்தி இவ் ஆய்வை மேற்கொள்ளும் போது சில பிரச்சனைகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று இவ் ஆய்வுக்கு பயன்படும் யாழ்ப்பாண அரசு தொடர்பாக கூறும் மூல நூல்கள் பெருமளவிற்கு யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடைந்த பின்பு பிற்பட்ட காலத்தில் தோற்றம் பெற்றவையாகக் காணப்படுவதனால் அவற்றின் உறுதித் தன்மை சந்தேகத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. மேலும் போர்த்துக்கேய ஆவணங்கள் கத்தோலிக்க மதம் சார்ந்து காணப்படுவதனால் அவற்றின் நம்பகத் தன்மையும் கேள்விக்குரியதாகவே உள்ளது. இதேவேளை இக்காலப்பகுதி தொடர்பான பெருமளவான ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் பேணப்படாது அழிவடைந்திருப்பதால் இங்கு இடம்பெற்ற போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளை அறிந்து கொள்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொண்ட வகையிலேயே இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இவ் ஆய்வானது பல நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் யாழ்ப்பாண இராச்சியத்தவர்கள் தமது தனித்துவப் பண்பாட்டை பாதுகாக்க போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளையும், அதனை எவ்வாறான வகையில் மேற்கொண்டிருந்தனர் என்பதை வெளிப்படுத்தவும், இவர்களது எதிர்நடவடிக்கையே யாழ்ப்பாணத்தவரது தனித்துவப் பண்பாடு நிலைபெறக் காரணமானது என்பதை வெளிப்படுத்தவும், இவர்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளை பிற்கால சந்ததியினர் அறியும் வகையில் ஆவணப்படுத்தும் நோக்குடனும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுமுறையியல்**

வரலாற்று அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வில் முதலாம் தரத் தரவுகளாக யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக குறிப்பிடும் மூல நூல்கள், போர்த்துக்கேயர் காலத்தில் வருகைதந்திருந்த மதகுருமார்கள் எழுதியகுறிப்புக்கள், கடிதங்கள், நூல்கள், லிஸ்பன் சென்று யாழ்ப்பாணந் தொடர்பான சான்றுகளை சேகரித்து எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், போர்த்துக்கேயர் காலநினைவுச் சின்னங்கள் அழிபாடுகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் தரத் தரவுகளாக போர்த்துக்கேயர்

காலம் தொடர்பாக பிற்பட்ட காலத்தில் வெளியிடப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**போர்த்துக்கேயரது இலங்கை வருகை**

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக வளர்ந்து வந்த அறிவியல் துறைகளைப் பயன்படுத்தி எழுச்சிபெற்ற சில அரசுகள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டு பல நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தன. இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட ஆட்சியாளர்களில் ஒருவரான போர்த்துக்கேயர் கி.பி 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகள் மீது தமது கவனத்தை செலுத்தத் தொடங்கினர் [Perara. S.G, 1948, P.125]. இதன் விளைவு அந்நாடுகளது ஒட்டுமொத்த வரலாற்றிலும் பெரும் திருப்புமுனை ஏற்படத்தொடங்கியது. தமது கீழைத்தேய நடவடிக்கைகளுக்கான தலைமையகமாக கோவாவினை கொண்டிருந்த அவர்கள் எதிர்பாராதவிதமாகவே கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையில் காலடிபதித்தனர் [சிற்றம்பலம். சி.க, 1992. ப66-79].

**கோட்டை அரசு மீதான மேலாதிக்கமும் சுதேசிகளது எதிர்நடவடிக்கைகளும்**

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடிபதித்த பகுதியானது கோட்டை அரசின் ஆதிக்கத்திற்குட்பட்டதாக விளங்கியதனால் இவர்களது முதற் தொடர்பு கோட்டை அரசுடனேயே இடம்பெற்றது. இக்காலத்தில் கோட்டையின் ஆட்சியாளனாக 8ஆம் வீரபராக்கிரமபாகு விளங்கினான். இவ்வேளையில் போர்த்துக்கேயர் மன்னனை சந்திக்க விரும்பியபோது அவர்களை சுற்றுப்பாதை ஊடாகவே சுதேசிகள் மன்னனிடம் அழைத்துச் சென்றனர். இச் சம்பவமானது சுதேசிகளது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதாகவே உள்ளது [குணசிங்கம். மு, ப-122]. இச் சந்திப்பின் மூலம் அவர்கள் இலங்கையில் வர்த்தக நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை பெற்றுக் கொண்டனர். இதேவேளை 8 ஆம் வீரபராக்கிரமபாகுவின் பின்னர் கோட்டை அரசில் ஆட்சி உரிமை சம்மந்தமான போட்டி வலுவடையத் தொடங்கியது. அவ்வகையில் கோட்டை மன்னனாக இருந்த தர்மபராக்கிரமபாகு தனது அரசை பாதுகாக்கும் வகையில் போர்த்துக்கேயரது உதவியை நாடினான். இதைத் தொடர்ந்து போர்த்துக்கேயரது செல்வாக்கு கோட்டை அரசில் ஏற்படத்தொடங்கியது. இவனின் பின் ஆட்சியை பெற்றுக்கொண்ட விஜயபாகு போர்த்துக்கேயரது நடவடிக்கைகளை நிறுத்தும் நோக்குடன் கள்ளிக்கோட்டை சமோரினின் உதவியைபெற்று அவர்களுக்கு எதிராக செயற்பட்டு வந்தான். இவனே போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்ட முதல் மன்னனாகவும் திகழ்கின்றான் [Perara. S.G, 1948, P.121-225].

விஜயபாகுவின் பின்னர் கோட்டை அரசு மேலும் ஸ்திரமற்ற நிலையை அடையத் தொடங்கியது. அதாவது இவனின் பின்னர் கோட்டை அரசு அவனது மகன்களால் மூன்றாகப் பகிரப்பட்டு ஆட்சிசெய்யப்பட்டு வந்ததுடன் அவர்களிடையே ஒற்றுமை காணப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் அவர்களது அரசியலில் தலையிடத் தொடங்கினர். இக்காலத்தில் கோட்டை அரசின் ஆட்சியாளனாக இருந்த புவனேகபாகு அவர்களது தலையீடுகளுக்கு அனுமதிவழங்கி வந்தான். இதனால் காலம் செல்லச் செல்ல போர்த்துக்கேயரது தலையீடு கோட்டை அரசில் அதிகரிக்கத் தொடங்கியதுடன் அதற்கெதிராக சுதோசிகளது எதிர்ப்புணர்வும் வலுவடையத் தொடங்கியது. அவ்வகையில் புவனேகபாகுவின்

போர்த்துக்கேயருடனான உறவினை விரும்பாத சுதேசிகள் தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில் கோட்டை அரசிலிருந்து வெளியேறி சீதாவக்கை அரசில் குடியேறினர். இதேவேளை சீதாவக்கை ஆட்சியாளனான மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும் இயக்கத்திற்கு தலைமைதாங்கும் விடுதலை வீரனாக அவதாரம் எடுத்தான். இவன் 1562 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு எதிராக முல்லேரியா என்ற இடத்தில் மேற்கொண்ட போரானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போராக அமைந்திருந்தது [Perara. S.G, 1948, P. 121-243]. இவ்வாறாக சுதேசிகளிடையே காலத்திற்கு காலம் எதிர்ப்புக்கள் கிளம்பிவந்த போதும் போர்த்துக்கேயர் அவற்றை சமாளித்து தமது செல்வாக்கை நிலைநாட்டி வந்தனர்.

புவனேகபாகுவின் மரணத்தை தொடர்ந்து அவனது பேரனான தர்மபாலனை ஆட்சியாளராக நியமித்த போர்த்துக்கேயர் அதன் மூலம் தமது நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வந்தனர். இதனை விரும்பாத இவனது தந்தை விதியபண்டார போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்பட்டதுடன் கத்தோலிக்க தேவாலயங்களை அழித்துவந்தான். இவனை கைதுசெய்யும் முயற்சியில் போர்த்துக்கேயர் ஈடுபட்ட போது அங்கிருந்து தப்பி யாழ்ப்பாண அரசில் தஞ்சமடைந்தான். இதேவேளை கோட்டை அரசன் தர்மபாலன் மரணமானதை தொடர்ந்து அவன் எழுதிக்கொடுத்த மரணசாசனத்தின் அடிப்படையில் கி.பி 1597 ஆம் ஆண்டு கோட்டை அரசின் ஆட்சி உரிமையை போர்த்துக்கேயர் பெற்றுக் கொண்டதுடன் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர் [கிருஷ்ணராசா. செ, 2005, ப. 83-132]. இதேவேளை கோட்டையிலிருந்து போர்த்துக்கேயரை துரத்தும் நோக்குடன் சீதாவக்கை. கண்டி மற்றும் யாழ்ப்பாண ஆட்சியாளர்கள், சுதேசிகள் இணைந்து பலமுறை முயன்றும் அவை பயனற்றவையாகவே முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**கண்டி அரசு மீதான மேலாண்மையும் சுதேசிகளது எதிர்ப்புணர்வும்**

கோட்டை அரசை தம்வசப்படுத்திய போர்த்துக்கேயர் கண்டி அரசின் மீது தமது மேலாண்மையை ஏற்படுத்த முயற்சி செய்து வந்தனர். கண்டி அரசை பொறுத்தவரை அதன் ஆட்சியாளனாகக் காணப்பட்ட விக்கிரமபாகுவின் காலத்திலிருந்தே போர்த்துக்கேயரது தொடர்பு ஏற்படத்தொடங்கியது. குறிப்பாக மாயாதுன்னை கி.பி 1545 ஆம் ஆண்டு கண்டிமீது படையெடுப்பை மேற்கொண்ட போது விக்கிரமபாகு அதற்கெதிராக செயற்படும் பொருட்டு போர்த்துக்கேயரது உதவியை நாடியிருந்தான். விக்கிரமபாகுவின் மறைவின்பின் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையால் போர்த்துக்கேயர் கண்டி அரசில் தலையிடும் நிலை ஏற்பட்டு வந்தது. ஆனால் விமலதர்மசூரியன் கண்டியின் அரசுரிமையை பெற்றதும் போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடுகளும் அதிகரிக்கத் தொடங்கின. 1594 ஆம் ஆண்டு போர்த்துக்கேயருக்கு எதிராக விமலதர்மசூரியன் தந்துரே என்ற இடத்தில் நிகழ்த்திய போரானது முக்கியத்துவம் வாய்ந்தநிகழ்வாக அமைந்தது [Perara. S.G, 1948, P. 121-243]. அதன் பின் போர்த்துக்கேயர் கண்டி அரசை கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். இதற்காகப் பல தளபதிகளை பயன்படுத்தி பல முறை படையெடுப்புக்களை மேற்கொண்ட போதும் தோல்வியையே தழுவிவந்தனர். இந்தவகையில் கண்டிமீது மேலாண்மையை ஏற்படுத்த போர்த்துக்கேயர் பலமுறை முயன்றும் அது இயலாதகாரியமாகவே இருந்தது.

**யாழ்ப்பாண இராச்சியமும் போர்த்துக்கேயரது மேலாதிக்கமும்**

நாகதீபப் பண்பாட்டுத் தளத்தில் மலர்ந்திருந்த தமிழ் அரசாக குறிப்பிடப்படும் யாழ்ப்பாண அரசானது கி.பி 13 ஆம் நூற்றாண்டில் ஆரியச்சக்கரவர்த்திகளால் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்டிருந்தது [இந்திரபாலா. க, 1972, ப. 24]. இவ்வரசானது யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதன் அருகிலிருந்த தீவுகளையும், வன்னியின் சிலபகுதிகளையும், மன்னார், திருகோணமலை ஆகியவற்றை உள்ளடக்கியவகையில் யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்பட்டு வந்தது [Pathmanathan. S, 1978, P. 185-255]. சுதந்திர அரசாக விளங்கிய இவ்வரசுடனான போர்த்துக்கேயரது முதற் தொடர்பானது கி.பி 1543 ஆம் ஆண்டின் பின்பே ஏற்பட்டுவந்தது. அதற்குக் காரணம் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த சங்கிலி செகராசசேகரன் என்பவனது போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடுகளும் சுதேசிகளிடையே காணப்பட்ட சுதந்திர உணர்வுமே ஆகும் [குணசிங்கம். மு, 1999, ப. 100-125]. ஆனால் சங்கிலி செகராசசேகரனது மறைவின்பின் அரசுரிமை சம்மந்தமாக ஏற்பட்ட போட்டித்தன்மை யாழ்ப்பாண அரசின் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை வெளிக்காட்ட தொடங்கியது. ஆட்சி உரிமையை பெறவிரும்பிய அரசமரபினர் போர்த்துக்கேயரது உதவியை நாடியதனால் அவர்களது செல்வாக்கு படிப்படியாக ஏற்பட்டு இறுதியில் இவ் அரசையும் அவர்கள் கைப்பற்றும் நிலை ஏற்பட்டது. அந்தவகையில் யாழ்ப்பாண அரசை கைப்பற்றும் நோக்குடன் காணப்பட்ட போர்த்துக்கேயர் கி.பி 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசின் இறுதி மன்னனான சங்கிலிகுமாரனை கைது செய்ததன் மூலம் தமது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொண்டனர் [பத்மநாதன். சி, 2011]. எனினும் தமிழ் மொழி மற்றும் இந்துப்பண்பாட்டில் மூழ்கியிருந்த யாழ்ப்பாண இராச்சிய மக்கள் காலத்திற்கு காலம் தமது எதிர்ப்புணர்வை போர்த்துக்கேயர்க்கு எதிராக வெளிப்படுத்தி வந்தனர். அதனை முறியடிக்கும் வகையில் போர்த்துக்கேயரும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

**சங்கிலிமன்னனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையும்**

யாழ்ப்பாண இராச்சியத்தில் சங்கிலி மன்னன் ஆட்சிபுரிந்து வந்த காலத்திலேயே போர்த்துக்கேயரது முதற் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இவன் அந்நியரான போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசில் கால்பதிப்பதை ஆரம்பம் முதலே விரும்பாதவனாகவும் அவர்களுக்கு எதிராகச் செயற்படுபவனாகவும் காணப்பட்டான். இதனால் இவனை போர்த்துக்கேய ஆவணங்கள் இகழ்ந்தே குறிப்பிடுகின்றன. இது அவனது மொழி, சமய மற்றும் நாட்டுப்பற்றையே பிரதிபலிப்பதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது[சிற்றம்பலம்.சி.க,1992,ப.69]. இவனது ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயரது வர்த்தகக் கப்பல்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் கரையொதுங்கியிருந்தபோது சங்கிலி மன்னன் தனது படையை அனுப்பி அப்பொருட்களை பறிமுதல் செய்ததுடன் கப்பல்களையும் அழித்தொழித்து அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தான் [Queyroz, Tr, 1930, P 51]. ஆனால் அச்சம்பவம் போர்த்துக்கேயரை ஆத்திரமூட்டுவதாகவே அமைந்திருந்தது. இதற்கான இழப்பீட்டை பெறும் நோக்குடன் போர்த்துக்கேயப் படை மாட்டின் அல்போன்சோ த சூசா என்பவன் தலைமையில் கி.பி 1543 ஆம் ஆண்டு படையெடுத்து வந்தது. சூழ்நிலை பாதகமாக இருப்பதை உணர்ந்த சங்கிலி போர்த்துக்கேயருடன் போர்புரிய விரும்பாது உடன்படிக்கையை மேற்கொண்டு அவர்களுக்கு இழப்பீட்டை வழங்கி அவர்களை திருப்பியனுப்பினான். இது அவர்களது தலையீடு இராச்சியத்தில் ஏற்படுவதை விரும்பாமலே இவ்வாறு நடந்து கொண்டிருப்பான் என எண்ணத் தோன்றுகின்றது.

இந் நிகழ்வின் பின்பும் சங்கிலி மன்னனது போர்த்துக்கேயருக்கு எதிரான செயற்பாடானது தொடர்ந்த வண்ணமே இருந்தது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மன்னாரில் இடம் பெற்ற நிகழ்வை குறிப்பிட முடியும். அதாவது யாழ்ப்பாண இராச்சியத்தின் ஓர் பகுதியான மன்னாரில் கத்தோலிக்க மதகுருவான வண. பிரான்சிஸ் சேவியர் தலைமையில் மதமாற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன [Queyroz, Tr, 1930, P 51]. இதனை அறிந்து கொண்ட சங்கிலி மன்னன் கி.பி 1544 ஆம் ஆண்டு மதம் மாறியவர்களை மீண்டும் சைவ சமயத்திற்கு மாறும்படி கட்டளை பிறப்பித்தான். இவனது கட்டளையை ஏற்கமறுத்த பலரை இவனது படையினர் தமது வாழுக்கு இரையாக்கி வந்தனர். இவ்வாறு இவனது படையினரால் 600 பேர் கொல்லப்பட்டதுடன் பிரான்சிஸ் சேவியரின் சீடனும் சங்கிலி மன்னனின் பிரதிநிதியாக இருந்த இளம்சிங்கம் என்பவனும் இதன்போது கொல்லப்பட்டான் [கிருஷ்ணராசா. செ, 2005, ப. 83-132]. தீவிர இந்துமதப் பற்றாளனான சங்கிலியன் இவ்வாறு நடந்து கொண்டதற்குக் காரணம் இதன் மூலம் போர்த்துக்கேயரது செல்வாக்கு இராச்சியத்தில் நிலைத்துவிடும் என கருதியமையே ஆகும். ஆனால் இவனது இச்செயற்பாடு போர்த்துக்கேயருக்கு கடும்கோபத்தை தோற்றுவித்திருந்ததனால் அவனை தண்டிக்கும் நோக்குடன் மீண்டும் படையெடுப்பை மேற்கொண்டனர்.

போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையுடன் தொடர்ந்து செயற்பட்டுவந்த சங்கிலி போர்த்துக்கேயருக்கு எதிராக அக்காலப்பகுதியில் செயற்பட்டுவந்த தென்னிலங்கை சிங்கள ஆட்சியாளர்களுடன் நட்புறவு கொண்டிருந்ததைக் காணமுடிகின்றது. அவ்வகையில் போர்த்துக்கேயருக்கு எதிராக போராடிவந்த சீதாவக்கை மன்னன் மாயாதுன்னையுடன் இவன் நட்புறவை பேணிவந்தான். மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராகபோரிடுவதற்கு தென்னிந்தியாவிலிருந்து படைகளை வரவழைத்தபோது அப்படைகள் யாழ்ப்பாணத்தினூடாகச் செல்வதற்கு உதவியளித்து வந்தான். அத்துடன் கோட்டை மன்னன் புவனேகபாகுவிற்கு எதிராக மாயாதுன்னை கி.பி 1545 ஆம் ஆண்டு படையெடுத்தபோது அப்படையெடுப்பிற்கு தனது உதவியையும் வழங்கியிருந்தான் [குணசிங்கம். மு, 2008, ப. 154-206]. மற்றோர் நிகழ்வாக தர்மபாலன் கோட்டை அரசின் ஆட்சிப்பீடமேறி போர்த்துக்கேயர்க்கு ஆதரவாக செயற்பட்டு வந்தபோது அவனது தந்தை விதியபண்டாரன் அவனுக்கு எதிராக செயற்பட்டதுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் செயற்பட்டு வந்தான். இதனால் போர்த்துக்கேயர் தன்னை கொலை செய்யலாம் என அஞ்சி புத்ததந்ததாதுவுடன் சங்கிலியிடம் தஞ்சமடைந்திருந்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராக சங்கிலியுடன் இணைந்து செயற்பட்டு வந்தான். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராக போரிடுவதற்கு வெடிகுண்டு தயார் செய்தபோது வெடிவிபத்து ஒன்றிலேயே விதியபண்டாரன் யாழ்ப்பாணத்தில் மரணமானான். இச்சம்பவம் காரணமாகவே நல்லூர் பகுதியில் பூதவராயர் ஆலயம் அமைக்கப்பட்டதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர் [சிற்றம்பலம். சி.க, 1992, ப. 70]. இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராக சங்கிலி தொடர்ந்து செயற்பட்டு வந்ததன் காரணத்தால் போர்த்துக்கேயரும் சங்கிலிக்கெதிராகச் செயற்படும் வகையில் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொள்ளத் தொடங்கினர்.

**சங்கிலி மன்னனது தோல்வியும் போர்த்துக்கேயருக்கு எதிரான சுதேசிகளது நடவடிக்கைகளும்**

சங்கிலிக்கெதிரான போர்த்துக்கேயரது படையெடுப்பு கி.பி 1560 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்தினோ பிரகன்ஸா என்ற தளபதியின் தலைமையில் இடம்பெற்றது. இப்படையெடுப்பால் தோல்வியடைந்த சங்கிலி மன்னன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டு போரைமுடிவுக்குக் கொண்டுவந்தான்

[சிற்றம்பலம். சி.க, 1992, ப. 75]. எனினும் படையெடுத்து வந்த போர்த்துக்கேயப் படை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல அழிவுகளை மேற்கொண்டு வந்தது. சங்கிலி மன்னனோ கையறு நிலையில் காணப்பட்டதனால் அதனை தடுக்க முடியாதிருந்தான். போர்த்துக்கேயரோ தமிழ் மக்களது வீடுகள், ஆலயங்கள் ஆகியவற்றுள் நுழைந்து அங்கிருந்த செல்வங்களை சூறையாடி வந்தனர். இந்துக்கள் புனிதமாக போற்றும் பசுக்களை கொன்று உணவாக்கி வந்தனர். இந்துக்கள் கிறிஸ்தவத்தை தழுவவேண்டும் எனத் துன்புறுத்தப்பட்டனர். இதனை பொறுக்க முடியாத சுதேசிகள் கிளர்ந்தெழுந்தனர். அந்தவகையில் போர்த்துக்கேயப் படையினரையும் மதகுருமாரையும் கொலை செய்தனர். மதப்பணிபுரிவதற்கு வருகைதந்த கொச்சின் பிஷப் டொம் ஜோஜ் தரெமுடோ என்பவர் இதன்போது சுதேசிகளால் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தவரது எதிர்ப்பலை நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதை கண்ட போர்த்துக்கேயப் படை யாழ்ப்பாணத்தை விட்டு நீங்கி மன்னார் சென்றடைந்தது. இந்தவகையில் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கை வெற்றியளித்திருந்தாலும் அது சிறிதுகாலமே நிலைத்திருந்தது. ஏனெனில் சங்கிலிமன்னனது காலத்தின் பின்னர் யாழ்ப்பாண அரசில் அரசுரிமை தொடர்பாக குழப்பநிலை நிலவிவந்தது. இவ்வேளையில் அரசுரிமையை பெறவிரும்பியவர்கள் போர்த்துக்கேயரது உதவியை நாடி அவர்களது செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட வழியமைத்துக் கொடுத்தனர்.

## புவிராசபண்டாரமும் போர்த்துக்கேயருக்குஎதிரானநடவடிக்கைகளும்

சங்கிலி மன்னன் கி.பி 1561 ஆம் ஆண்டு மறைந்ததை தொடர்ந்து அவன் மகன் புவிராசபண்டாரம் ஆட்சிப்பொறுப்பை பெற்றிருந்தாலும் அவன் அரசிலிருந்து வெளியேற்றப்பட்டான். அதன்பின் போர்த்துக்கேயரது தலையீட்டுடன் அரசைபெறும் அவலமானநிலை ஆட்சியாளரிடையே தோற்றம் பெற்றிருந்ததுடன் அரசியல்ரீதியான குழப்பநிலையும் தோற்றம் பெற்றிருந்தது. இவ்வாறான அரசியல் குழப்பம் நிலவிவந்த வேளையில் சங்கிலியின் மகன் புவிராச பண்டாரம் மீண்டும் அரசுரிமையை கி.பி 1582 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்டான். இவனும் போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவன் என்றவகையில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேய படையுடன் 1590 ஆம் ஆண்டு போரில் ஈடுபட்டான். இப் போர் அவனுக்கு வெற்றியாக அமையாவிடினும் போர்த்துக்கேயரை கிலிகொள்ள வைத்திருந்தது. மேலும் இவன் போர்த்துக்கேயருக்கு எதிரான தாக்குதலை தீவிரமாக முன்னெடுக்கும் வகையில் அவர்களது எதிரியான கள்ளிக்கோட்டை சமோரினிடம் படை உதவி பெற்றுக்கொண்டான். இவ்வாறு பெற்ற படையுடன் தனது படையையும் இணைத்து போர்த்துக்கேயருக்கு எதிரான போரை ஆரம்பித்தபோது போர்த்துக்கேயர் தமது படைவீரரை பல பகுதிகளில் இருந்து பெற்று அப்படையெடுப்பை தோற்கடித்தனர். இதன் பின் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசை கைப்பற்றும் வகையில் தமென் டொங்கா என்ற தளபதி தலைமையில் கி.பி 1591 ஆம் ஆண்டு படையெடுத்து வந்து புவிராசபண்டாரத்தை கைதுசெய்து அவனை சிரச்சேதம் செய்ததன் மூலம் போரை முடிவுக்கு கொண்டுவந்தனர். இதன் பின்பெரியபுள்ளையின் மகன் எதிர்மன்னசிங்கன் என்பவனை மன்னராக்கி வரலாற்றுச் சிறப்புமிக்க ''நல்லூர் உடன்படிக்கையை'' மேற்கொண்டதன் மூலம் தமது செல்வாக்கை நிலைநாட்டிக் கொண்டனர் [குணசிங்கம். மு, 2008, ப. 154-206].

## எதிர்மன்ன சிங்கனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்

போர்த்துக்கேயரின் அனுசரனையுடன் ஆட்சிப்பீடத்தில் ஏறிய எதிர்மன்னசிங்கன் ஆரம்பத்தில் போர்த்துக்கேயருக்கு சார்பாக நடந்துகொண்டாலும் காலப்போக்கில் போர்த்துக்கேயரது நடவடிக்கையால்

அதிருப்திகொண்டு அவர்களுக்கு எதிராக நடக்கத் தொடங்கினான். அத்துடன் இவன் இந்துக்களுக்கு ஆதரவாக செயற்படுபவனாகக் காணப்பட்டதனால் போர்த்துக்கேயரது எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டான். அதேவேளை போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டுவந்த கண்டி மன்னர்களான விமலதர்மசூரியன், செனாத் ஆகியோருக்கு தென்னிந்தியாவிலிருந்து கிடைத்துவந்த படையுதவி, ஆயுத உதவி ஆகியவற்றை யாழ்ப்பாணத்தினூடாக கொண்டு செல்வதற்கு உதவிபுரிந்து வந்தான். இவனது இவ்வாறான நடவடிக்கைகள் போர்த்துக்கேயருக்கு சந்தேகத்தையே ஏற்படுத்தி வந்தன. எனவே எதிர்மன்ன சிங்கனை அரசிலிருந்து நீக்கும் எண்ணத்துடனேயே போர்த்துக்கேயர் காணப்பட்டனர். ஆனால் அவன் கி.பி 1617 ஆம் ஆண்டு மரணத்தை தழுவிக்கொண்டான் [சிற்றம்பலம். சி.க, 1992, ப. 78]. அவனின் பின் அவனது மருமகன் சங்கிலி குமாரன் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

**சங்கிலி குமாரனும் போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளும்**

எதிர்மன்ன சிங்கன் போன்று போர்த்துக்கேயரது அனுசரனையுடன் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக்கொண்ட சங்கிலி குமாரன் காலப்போக்கில் போர்த்துக்கேயருக்கு எதிராகவே செயற்பட்டு வந்தான். இவன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும் வகையில் கண்டிஅரசு, நாயக்கஅரசு, கள்ளிக்கோட்டைஅரசு, ஆகியவற்றுடன் தொடர்புகளை பேணி அவர்களிடம் படைஉதவிபெற்று பலதாக்குதல்களை மேற்கொண்டு வந்தான் [Abeyasingi. Tikiri, 1986]. அவ்வகையில் 1619 ஆம் ஆண்டு சங்கிலி மன்னனின் கூட்டுப்படை மன்னாரில் தாக்குதலை மேற்கொண்டிருந்த சமயமே சங்கிலியை கைதுசெய்யும் நோக்குடன் பிலிப் டீ ஒலிவேறா தலைமையில் படையெடுப்பொன்றை போர்த்துக்கேயர் ஆரம்பித்திருந்தனர். இப்படையெடுப்பில் சங்கிலியின் படைகள் தோல்வியை சந்தித்துவந்தன. படையின் நிலையை அறிந்துகொண்ட சங்கிலி குமாரன் போர்த்துக்கேயரிடம் அகப்படாது தப்பிக்கும் நோக்குடன் அரச செல்வங்கள் மற்றும் தனது குடும்பத்தினருடன் கடல் வழியாக புறப்பட்டான். ஆனால் கடலில் வைத்து போர்த்துக்கேயரால் கைதுசெய்யப்பட்டு கோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு துக்கிலிடப்பட்டான். தூக்கிலிடும் சந்தர்ப்பம் வரை அவனை கத்தோலிக்க மதத்தை தழுவும்படி துன்புறுத்தப்பட்டான். எனினும் அவனதுஅந்நியருக்குஎதிரானகொள்கையின் விடாப்பிடியால் மதம்மாறாது மரணத்தை தழுவினான். இவனது கைதுடன் யாழ்ப்பாணத்து தமிழ் அரசும் அஸ்தமனமானது குறிப்பிடத்தக்கது.

**அரசு வீழ்ச்சியடைந்தபின்னர் போர்த்துக்கேயருக்கு எதிரான சுதேசிகளது நடவடிக்கைகள்**

1619 ஆம் ஆண்டு சங்கிலி குமாரனை கைதுசெய்ததுடன் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆதிக்கத்தை உறுதிப்படுத்திய போர்த்துக்கேயர் தமது நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுக்கத் தொடங்கினர். இதனால் சுதேசிகள் பலர் துன்பத்தை அனுபவித்து வந்தனர். குறிப்பாக யாழ்ப்பாண அரசுமீதான படையெடுப்பிற்கு தலைமைதாங்கி வந்த பிலிப் டீ ஒலிவேறா கடும் போக்கை கடைப்பிடித்து தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தான் [Silva, C. R 1973]. இதனால் சுதேசிகள் பலர் இவன் மீதும் இவனது படைமீதும் பெரு வெறுப்பை கொண்டிருந்தனர். இவ்வேளையில் பிலிப் டீ ஒலிவேறாவின் மரணம் 1627 ஆம் ஆண்டு இடம்பெற்றது. இது இராச்சியத்தில் இருந்த மக்களுக்கு பெரும் நின்மதியை வழங்குவதாக இருந்ததுடன் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படுவதற்கான ஊக்கத்தை வழங்கியது. இவ்வேளையில் யாழ்ப்பாண அரசுமீது மணவினை உறவு மூலம் உரிமை உண்டு எனக்கூறி கண்டி மன்னன் செனரத் 1628 ஆம் ஆண்டு முதலாவது படையெடுப்பை மேற்கொண்டுவந்து

போர்த்துக்கேயருடன் போரிட்டான். இதனை சாதகமாக பயன்படுத்திய தமிழ்மக்கள் அவர்களுடன் இணைந்து போரிட்டனர். இதன்போது இரு கத்தோலிக்க மதகுருமாரும் 30 இற்கும் அதிகமான தேவாலயங்களும் அழிக்கப்பட்டன. இது சுதேசிகளிடம் காணப்பட்ட எதிர்ப்புணர்வின் வெளிப்பாட்டையே பிரதிபலிப்பதாக உள்ளது. கடுமையாக போராடிய சுதேச படையினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி 13 நாட்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். எனினும் போர்த்துக்கேயர் இப்படைகளை சிதறடித்து மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக் கொண்டனர். அதன் பின் செனரத் 1629 ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் நோக்குடன் படையெடுப்பை மேற்கொண்ட போதும் அப்படையெடுப்பு போர்த்துக்கேயரால் முறியடிக்கப்பட்டது[3]. இப்படையெடுப்பே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இறுதி படையெடுப்பாகவும் அமைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் சுதேசிகளது போர்த்துக்கேயருக்கு எதிரான நடிக்கையானது மௌனிக்கப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. அதேவேளை போர்த்துக்கேயரும் தமது நடவடிக்கைகளை ஒல்லாந்தர் 1658 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை கைப்பற்றும்வரை எதுவித தடைகளுமின்றி முன்னெடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

இலங்கை மீதான போர்த்துக்கேயரது மேலாதிக்கம் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியிருந்தாலும் அவர்கள் இலங்கையில் காலடி பதித்தது முதல் அங்கிருந்த அரசுகளை கைப்பற்றியது வரையும் அல்லது அதன் பின்னரும் அப்பகுதி ஆட்சியாளர்களும் சுதேசிகளும் இவர்களது நடவடிக்கைகளை எதிர்த்தே வந்தனர். இவ்வாறானதோர் நிலையே யாழ்ப்பாண இராச்சியத்திலும் காணப்பட்டது. யாழப்பாண இராச்சியத்தை பொறுத்தவரை தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களை கொண்டுவிளங்கும் பகுதியாக விளங்கியதனால் அந்நியரான போர்த்துக்கேயரது தொடர்பு ஏற்பட்டது முதல் தமது தனித்துவத்தை பாதுகாக்கும்வகையில் அவர்களுக்கு எதிராகவே செயற்பட்டுவந்தனர். அதேவேளை போர்த்துக்கேயரது சலுகைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் அடிபணிந்த சிலர் போர்த்துக்கேயரது விசுவாசிகளாக செயற்பட்டுவந்தமையானது சுதேசிகள் மேற்கொண்டுவந்த போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகள் தோல்வியடைய காரணமாகியது. எனினும் சுதேசிகள் அரசு இழந்தநிலையில் தமது தனித்துவப் பண்பாட்டை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்களை தாண்டி இன்றுவரை பேணிப்பாதுகாத்து வருவது வியப்பிற்குரிய ஒன்றாகவே திகழ்கின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. மயில்வாகனப்புலவர். ‘‘யாழ்ப்பாண வைபவமாலை’’ (குல.சபாநாதன் (பதிப்பாசிரியர்)), திருமகள் அச்சகம், சுன்னாகம், 1949.
2. சுவாமி ஞானப்பிரகாசர். ‘‘யாழ்ப்பாண வைபவ விமர்சனம’’. அச்சுவேலி, ஞானப்பிரகாச யந்திரசாலை,1928.
3. முத்துத்தம்பிப்பிள்ளை,ஆ. ‘‘யாழ்ப்பாணச் சரித்திரம’’. யாழ்ப்பாணம், நாவலர் பதிப்பகம்,1915.
4. சிற்றம்பலம்,சி.க. ‘‘யாழ்ப்பாண இராச்சியம்’’. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகவெளியீடு,திருநெல்வேலி. ப 66-79, 1992.
5. இந்திரபாலா,க. ‘‘யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்’’. யாழ்ப்பாணத் தொழ்பொருளியற் கழகம்,வட்டுக்கோட்டை. ப 23-53, 1972.
6. குணசிங்கம்,மு. ‘‘இலங்கையில் தமிழர் ஒருமுழுமையானவரலாறு’’. எம். விவெளியீடு,அவுஸ்திரேலியா. ப 154-206, 2008.

7. குணசிங்கம், மு. “இலங்கையர் தேசியவாதம்”. சிட்னி. ப 100-125, 1999.
8. கிருஷ்ணராசா, செ. “இலங்கைவரலாறுபாகம்-2”. பிறைநிலாவெளியீடு,கோண்டாவில். ப 83-132, 2005.
9. கிருஷ்ணராசா, செ. “இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்”. எ.பிகிறியேசன்,கொழும்பு. ப554-558,2012.
10. குணராசா,க. மற்றும் கமலா, கு. “இலங்கைச் சுருக்கவரலாறு”. கமலம் பதிப்பகம்,யாழ்ப்பாணம்.ப ,2008.
11. பத்மநாதன்,சி. “யாழ்ப்பாண இராச்சியம் ஒருசுருக்கவரலாறு”. குமரன் புத்தக இல்லம்,கொழும்பு. ப ,2011.
12. Pathmanathan, S. “The Kingdom of Jaffna”. Ceylon news paper Ltd, Colombo. P.P 185-255, 1978.
13. Abeyasingi, Tikiri. “Jaffna under the Portuguese”. Lake house investments Ltd, Colombo.P.P , 1986.
14. Gueyroz, Fernao De. “The temporal and spiritual conquest of Ceylon”. Translated by Fr.S.G.Perara, Colombo. P 51, 1930.
15. Silva, Chandra Richard. “The Portuguese in Ceylon”. H.w.cave& company, colombo. P, 1972.
16. Perara, S.G. “History of Ceylon”. Lake house, Colombo. P.p121-243, 1948.
17. Pieris, P.E. “Ceylon and the Portuguese”. Sri satguru publication, Delhi. P.02, 1970.